# மன்னாரில் ராணுவம் அட்டகாசம்


பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 3-00

முரசொலி

முரசு 04 ஒலி 149 வியாழன் 12-07-1990 (ஆனி 28) துல்ஹஜ் 18


## வீடுகள், கடைகள் தீக்கிரை

மன்னார்-முருங்கன் வீதியில் இராணுவத்தினரால் 64 வீடுகளும், 32 கடைகளும் எரிக்கப்பட்டன. இதே வேளை 20 வீடுகள், 10 இற்கு மேற்பட்ட கடைகள் கொள்ளையடிக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது.

முருங்கனில் ''இக்பால் தனியார் வைத்தியசாலை'' ''ராஜன் வைத்தியசாலை'' ஆகிய இருதனியார் மருத்துவ மனைகளும் எரிக்கப்பட்டன.

இத்துடன் சந்தைக்கட்டிடமொன்றும், அரிசியாலையொன்றும், பெற்றோல் நிலையமொன்றும் எரிக்கப்பட்டன என அறிவிக்கப்படுகிறது (9-ஸ்ரீ)

★ வல்வையில் நிகழ்ந்த அசாதாரண மின்னல் வேகத்தாக்குதல்

# கடற்புலி, கரும்புலிகள் இணைந்து சாதனை!

வல்வைக்கடலில் நேற்று முன்தினம் இரவு நடத்தப்பட்ட தாக்குதலில் கடற்புலிகளும் அப்பிரிவைச் சேர்ந்த கரும்புலிகளும் வெற்றிகரமாக ஈடுபட்டதாக அறிவிக்கப்படுகிறது-

நேற்று முன்தினம்இரவு 10 15 மணியளவில் வல்வெட்டித்துறைக் கடற்பகுதியில் கடற்புலிகளும் அப்பிரிவைச் சேர்ந்த கரும்புலிகளும் சேர்ந்து நடாத்திய தாக்குதலில் ஸ்ரீலங்கா கடற்படையின் பாரிய கப்பல் ஒன்று கடும் சேதத்திற்குள்ளாகியதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

கடற்புலியைச் சேர்ந்த மூன்று கரும்புலிகள் வெடிமருந்துகளுடன் படகில்

...4 ஆம் பக்கம் பார்க்க

## அகதிகள் அல்லலிலும் அரசு தன்நிலையில் அழுங்குப்பிடி

அம்பாறை மாவட்டத்தில் சிவில் நிர்வாகத்தை மீண்டும் ஏற்படுத்த அரசு முனைப்புடன் முனைந்துள்ளதாக நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

இம்மாவட்டத்தில் ஒரு இலட்சம் மக்கள் அகதிகளாகினர் என்றும் இன்னமும் நாற்பதாயிரம் பேர் அகதி முகாம்களில் தொடர்ந்து தங்கியுள்ளதாகவும் அரசு

...4 ஆம் பக்கம் பார்க்க

★ ஈழத்தமிழர் மடிவுக்கு முடிவு காண

# இராணுவம் அனுப்புவதா? காலம் பதில்சொல்லும் என்கிறார் கலைஞர்

''இலங்கையில் தொடர்ந்து நிகழ்ந்துவரும் இனப்படுகொலை வேதனை மிகத்தருகிறது. இந்தவகையில் அங்கு தமிழரைக் காப்பாற்ற இந்திய இராணுவத்தை அனுப்புவதா? இல்லையா? என்பது குறித்து எதுவும் இப்போது சொல்வதற்கில்லை இதற்கான பதிலை காலம் தான் சொல்லவேண்டும்'' என்று தமிழ் நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி நேற்றுத் தெரிவித்தார்.

திருச்சியில் வைத்து இலங்கையின் தற்போதைய நிலைமையிலான தனது நிலைப்பாட்டை அவர் தெளிவு படுத்தினார்.

தமிழர் வாழும் பகுதிகளில் அமைதி நிலை நாட்டப்படவும், தமிழர் பிரச்சினைத் தீர்வுகாணப்படவும் புதிய வழிகளைக் கண்டறிய வேண்டியுள்ளதாகவும் கலைஞர் சொன்னார்,

இலங்கையில் இராணுவத் தாக்குதல் தாங்காது தமிழர்கள் அகதிகள் வருவது சங்கடத்தைத் தருகிறது என்று குறிப்பிட்ட அவர் வடக்கு, கிழக்கு இணைந்த சுயாட்சி தேவை என்பதே தம் நிலைப்பாடு என்றார்,

''எக்காலத்திலும் தனி ஈழம் தான் பரிகாரமென திராவிட முன்னேற்றக் கழகமோ, தமிழ் நாடு அரசோ கருத்துத் திணிக்கவில்லை'' என்றும் சொன்னார் அவர்,

'' போரா(ரா)ளிகள் குழுக்கள் ஒன்றுபட்டிருக்க வேண்டும்.

4 ஆம் பக்கம் பார்க்க

## வீரமரணம் தழுவிய கடற், கரும்புலிகள்



மேஜர் காந்தரூபன்



கப்டன் வினோத்



கப்டன் கொலின்ஸ்

## பெண் போராளிக்கு அஞ்சலி

கொக்காவிலில் இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற நேரடி மோதலில் வீரமரணமடைந்த கல்வியங்காட்டைச் சேர்ந்த பெண் போராளியின் பூதவுடல் மக்

...4 ஆம் பக்கம் பார்க்

## பலாலியில் உக்கிர மோதல்

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் நண்பகல் 1 மணியளவில் இராணுவம்முன்னேறமுயன்றபோது விடுதலைப்புலிகள் முன்னேறிச் சென்று தாக்

...4 ஆம் பக்கம் பார்க்

# சிறிய செய்திகள்

## அகதிகளுக்கு உணவுப் பொருள்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் எஸ். சிவரெட்ணம், பங்குத் தந்தை வண. கிருபானந்தன் அடிகளார் ஆகியோர் மேற்கொண்ட முயற்சியினால் ஊர்காவற்றுறை கரம்பொன் பகுதிகளை அண்டி அகதிகளாக இடம் பெயர்ந்தவர்கட்கு முதலாம் கட்ட உணவுப் பொருட்கள் ப. நோ, கூ. சங்கக் கிளைகள் மூலமாக விநியோகிக்கப்பட்டுள்ளன,

காரைநகர் கடற்படை முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் பீரங்கித் தாக்குதல் காரணமாக பெருந்தொகையான மக்கள் தங்கள் இல்லிடங்களை விட்டு இடம் பெயர்ந்து நாரந்தனை புனித இராயப்பர் தேவாலயம், சின்னமடு தேவாலயம் ஆகியவற்றில் அடைக்கலம் புகுந்துள்ளனர். (கி)

## பிரதம தபாலக ஊழியர்க்கு அழைப்பு

(நாயன்மார்கட்டு)

யாழ், பிரதம தபாலதிபர் உட்பட யாழ். பிரதம தபாலகத்தில் கடமை புரியும் சகல ஊழியர்களையும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பிரதம தபாலகத்திற்கு சமுகமளிக்குமாறு வடமாகாண தபால் அத்தியட்சகர் எஸ். எம். சேதுகாவலர் அறிவித்துள்ளார். (33 கி)

## இவருக்கு உதவுவீர்களா?

இராணுவ நடவடிக்கையினால் பாதிக்கப்பட்டுள்ள வயாவிளான் மத்திய மகா வித்தியாலய தளபாடங்களையும், முக்கிய ஆவணங்களையும் அகற்றும் முயற்சியில் ஈடுபட்டிருந்த வேளை மேற்படி பாடசாலை அதிபரின் சைக்கிள் எவராலோ தவறுதலாக எடுத்துச் செல்லப்பட்டு விட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

இச்சைக்கிளை எடுத்தவர்கள் மருதனாமடம் உதவிக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தில் அல்லது முரசொலி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு அதிபர் சி. நடராஜா கேட்டுள்ளார். (கி)

## யாழ்தேவி வவுனியா வரை?

யாழ்தேவி ரயில்சேவையை வவுனியாவரை நீடிக்க உத்தேசிக்கப்படுவதாக புகையிரத திணைக்களம் அறிவித்துள்ளது.

தற்பொழுது யாழ்தேவி ரயில் சேவை அனுராதபுரம் மட்டுமே நடைபெற்று வருகின்றது.

யாழ்தேவி சேவை பாதிக்கப்பட்டதனால் புகையிரதப் பகுதிக்கு நாற்பது இலட்சம் ரூபா வருமானம் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கி)

## தாபரிப்பு நிதி வழங்கப்படும்

(அரியாலை)

யாழ். மாநகர சனசமூக நிலைய சமாசத்தினரால், வன்செயல் காரணமாக தந்தையை இழந்த பிள்ளைகளுக்காக மாதாந்தம் வழங்கப்படும் தாபரிப்பு நிதி 13 ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணி வரை நல்லூரில் இருக்கும் யாழ். மாநகர சபைப் பணிமனையில் வழங்கப்படவுள்ளது.

இந்நிதியைப் பெறுபவர்கள் குறிப்பிட்ட தினத்தில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அ (74கி)

## தமிழர்மீது பழிவாங்கல்

வவுனியா கோவில்குளம் பகுதியில் சுற்றி வளைத்த ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் 50க்கும் மேற்பட்ட தமிழ் மக்களைக் கைதுசெய்து முகாமுக்குக் கொண்டுசென்றுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் 12பேரைத் தடுத்து வைத்து மிகுதிப் பேரை விடுதலை செய்துள்ளனர் எனத் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (03-ஸ்ரீ)

## இந்நிலை இங்கும்

மாங்குளம், கொக்காவில் கிளிநொச்சி இராணுவ முகாம்களிலும் விமானப் படையினரின் ஹெலிகப்டர்களை இறக்க முடியாத நிலை காணப்படுவதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (கி)

# யாழ். தபால் சேவைகள் மீண்டும் ஆரம்பம்

(நாயன்மார்கட்டு)

யாழ்ப்பாணத்திலிருந்து— கொழும்பு உட்பட வெளி மாவட்டங்களுக்கான தபால் சேவையை அடுத்த சில தினங்களில் ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் இங்குள்ள தபால் பொதிகளை வவுனியாவுக்கு அனுப்பி, பின்னர் அங்கிருந்து ஏனைய மாவட்டங்களுக்கு தபால் பொதிகளை அனுப்புவதற்கான இத்திட்டத்தை அடுத்த சில தினங்களில் நடைமுறைப்படுத்தக் கூடியதாக இருக்குமென வடமாகாண தபால் சேவைகள் பணிப்பாளர் எஸ். எம். சேதுகாவலர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் வவுனியாவுக்கு உணவுப்பொருள் ஏற்றிவரச் செல்லும் கூட்டுறவுச் சங்க லொறிகளில் இப் பொதிகள் அனுப்பப்படும்.

அவை கொழும்பிலிருந்து வவுனியாவுக்கு உணவுப் பொருட்களை கொண்டு வரும் லொறிகளில் அப்பால் மாற்றி அனுப்பப்படும்.

இதேவேளை யாழ் மாவட்டத்துக்குள்ளேயான உள்ளூர் தபால் சேவைகள் நேற்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தபால் சேவகர்கள் சைக்கிள் வண்டிகளின் உதவியுடன் அஞ்சலோட்ட முறையில் உள்ளூர்ப் பொதிகளை எடுத்துச் செல்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

மீண்டும் பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்படும்வரை இவ்வாறு சைக்கிள் வண்டிகள் மூலம் தபால் பொதிகள் எடுத்துச் செல்லப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (கி)

## அகதிகளுக்கு உதவ மேலும் ரூ.2 கோடி தேவை

இராமேஸ்வரம், மண்டபம் கொட்டப்பட்டி முதலான இடங்களில் பெருமளவில் வந்து குவிந்த வண்ணமுள்ள இலங்கை அகதிகளுக்கு உதவ மாநில அரசு மத்திய அரசின் நிதி உதவியை நாடியுள்ளது.

இந்தவகையில் மேலும் இரண்டு கோடி ரூபா நிதியுதவி அவசியமாகிறது என இக் கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது, (ஸ்ரீ)

## உணவுப் பொருள்களை ஏற்றிவர

# பன்னிரெண்டு யாழ். லொறிகள் நேற்று மதவாச்சி புறப்பட்டன

அத்தியாவசிய உணவுப் பொருள்களை ஏற்றிவருவதற்கென நேற்று காலை யாழ். நகரிலிருந்து மதவாச்சிக்கு பன்னிரண்டுலொறிகள் அனுப்பிவைக்கப்பட்டன.

இந்த பன்னிரெண்டு லொறிகளில் இரண்டு வடமராட்சிப் பகுதி பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்களுக்கு சொந்தமானவை.

ஏனையவை குடாநாட்டின் ஏனைய பகுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்கக்கிளைகளைச் சேர்ந்தவை.

இந்த லொறிகளுடன் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதிகளை உள்ளடக்கிய இரு வாகனங்களும் கூடவே மதவாச்சி சென்றன. இந்த வாகனங்களிலொன்றுக்கு வானொலித்தொடர்பு வசதி ஏற்படுத்தப்பட்டிருந்தது.

பன்னிரெண்டு லொறிகளிலும் பெரிய அளவிலான செஞ்சிலுவைச் சங்க கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

கொழும்பிலிருந்து மதவாச்சிக்கு கொண்டு வரப்படும் உணவுப் பொருள்களை இந்த லொறிகள் இங்கு ஏற்றி வரும் எனத் தெரிவிக்கப்பட்டது. (64 கி)

## சர்க்கரையோ பாணி; என்றாலும்...

யாழ்நகரப் பகுதியில் மீண்டும் ''கியூ'' ; பாண், மா, சீனி போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்கும் நிவாரண உதவிகள் வேண்டவும் கியூ.

கல்வியங்காட்டில் சில தினங்களுக்கு முன் 100கிராம் சர்க்கரைக்கு நீண்ட கியூ காணப்பட்டது. இப்போ கூடுதலாக யாழ்நகரில் விற்பனையாகும் சர்க்கரை பாணிச் சர்க்கரையாகும். இது கூடுதலாக புகையிலைக்கு பாவிக்கப்படுகின்றது. அதில் கரி, கல் போன்றனவும் கூடுதலாக காணப்படுகின்றது. (68கி)


## மருந்துக்கடை இடமாற்றம்

க. செ. கைலாசம்பிள்ளை & சன்ஸ்

மருந்துச் சரக்கு வியாபாரம்

இப்போதைய சூழ்நிலையில் பாதுகாப்புக் கருதி எமது ஸ்தாபனம் கீழ்காணும் முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது.

எங்களிடம்

- அபிஷேகச் சாமான்கள்
- மருந்துச் சரக்குகள்
- ஆயுள் வேத மருந்துகள்,
- வாசனைத்திரவியங்கள்,

சகல சாமான்களையும் உங்கள் திருப்திக்கேற்ற வகையில் பெற்றுக்கொள்ளலாம்.

புதிய விலாசம்:

க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்

மருந்துச் சரக்கு வியாபாரம்

4, பலாலி வீதி, 2 - ம் ஒழுங்கை

யாழ்ப்பாணம்.

(ஆரியகுளம் சந்திக்கு அருகாமையில்) 07011


## 1-வது பிறந்தநாள் வாழ்த்து



செல்வன் றிஜெய்ந்த்

மட்டுவில் வடக்கு அம்மன் கோவில் வீதியைச் சேர்ந்த-உருத்திராபதி வனிதாமலர் தம்பதிகளின் அருந்தவப் புதல்வன் றிஜெய்ந்த் தனது முதலாவது பிறந்த நாளை இன்று வியாழக்கிழமை (12-07-1990) கொண்டாடுகின்றார். இவரை டடி, மம்மி, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், அன்ரிமார், சித்தப்பாமார், சித்தி, வவுனிக்குளம் அங்கிள்மார், அத்தைமார், மாமன்மார், அண்ணாமார், அக்காமார், மச்சாள்மார், அத்தான்மார் இவரை கண்ணகை அம்மன் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

07006


இடமாற்ற அறிவித்தல்

## பூபாலசிங்கம் புத்தகசாலை

எமது அன்பான வாடிக்கையாளர்களே!

மாணவமணிகளே!!

ஆசிரியப் பெருந்தகைகளே!!!

உங்கள் அனைவரதும் நன்மை கருதி எமது புத்தக நிலையம் நல்லூர் சிவன் கோயிலுக்கு அருகாமைக்கு இடமார்றம் செய்யப்பட்டுள்ளது. உங்கள் அபிமான தினசரி முரசொலியும் வாங்கலாம்.

பூபாலசிங்கம் புத்தகசாலை

சிவன்கோயில் அருகாமை, நல்லூர்

யாழ்ப்பாணம்

07012

### புலிகள் போர்க்களத்தில்

# 6 வது ஷரத்து நீக்கம் பற்றி பேச்சுக்கே இடமில்லை -ரஞ்சன்

பெரும் சர்ச்சையை நாடெங்கும் இனப்பிரச்சனை அரசியலமைப்பின் ஆறாவது ஷரத்து நீக்கம் பற்றி பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்தன காட்டமானகருத்தினை வெளியிட்டுள்ளார்,

இச் ஷரத்தை நீக்க வேண்டும் என்று வற்புறுத்தி வந்த விடுதலைப் புலிகள் இப்போது யுத்த களத்தில் இருக்கிறார்கள் ஆகையால் இச் ஷரத்து நீக்கம் பற்றிய கேள்விக்கே இப்போது இடமில்லை என்று திரு. விஜயரத்தன தெரிவித்ததாக நேற்று கொழும்பு வட்டாரங்கள் கூறின.

ஸ்ரீலங்கா குடியரசின் ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் சகலரும் விசுவாச சத்தியப் பிரமாணம் செய்து கொள்ள வேண்டும் என்று இத் திருத்தச் சட்ட ஷரத்து வற்புறுத்துகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

### இந்தியன் "எக்ஸ்பிரஸ், தகவல்"

# கொலைப் பட்டியலில் "சோ"வுக்கு முதலிடம்

தமிழகத்தின் பிரபல பத்திரிகையாளர்களில் ஒருவரும் 'துக்ளக் இதழின் ஆசிரியரும், சினிமா நடிகருமான 'சோ'வைக் கொலை செய்யத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாக நேற்று சென்னை வட்டாரங்கள் தெரிவித்தன.

"இந்தியன் எக்ஸ்பிரஸ் இதுபற்றிய செய்தி ஒன்றினை வெளியிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

புதிதாகத் தயாரிக்கப்பட்டுள்ள கொலைப் பட்டியலில் சோ வின் பெயர் முதலில் உள்ளதாகவும் இப்பட்டியலில் பல அரசியல் பிரமுகர்கள், முக்கியஸ்தர்கள் பெயர்களும் உள்ளதாகவும் இலங்கை தமிழ் தீவிரவாதக் குழுவினால் இப்பட்டியல் தயாரிக்கப்பட்டிருப்பதாகவும் மேலும் தகவல் வெளியாகியுள்ளது. (ஸ்ரீ)

### கிளி., முல்லை. மாவட்ட அரச ஊழியர்

# சாக்குப் போக்கு இன்றி கடமைக்குச் செல்ல வேண்டும்

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த அரச ஊழியர்கள் இனியும் காலதாமதம் செய்யாமல் தத்தமது காரியாலயங்களுக்குச் செல்லவேண்டும். பிரயாண வசதியின்மை போன்ற சாக்குப் போக்குகளைச் சொல்லிக்கொண்டு யாழ் மாவட்டத்திலுள்ள அரச காரியாலயங்களில் கையொப்பமிட்டுவிட்டு இங்கு தங்கி நிற்பதை இனி அனுமதிக்க முடியாது.

இவ்வாறு யாழ், அரச அதிபர் அன்ரன் அல்பிறட் யாழ். செயலகத்தில் நடைபெற்ற உதவி அரசாங்க அதிபர்கள் கூட்டத்தில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர் இங்கு மேலும் பேசுகையில் இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் பல உயர் அதிகாரிகள், அந்த மாவட்டத்தில் தங்கி நின்று அகதிகள் நிவாரணம் போன்ற அத்தியாவசிய பணிகளை மேற்கொள்ளும்போது யாழ். மாவட்டத்தில் தங்கி நிற்கும் இந்த அரச ஊழியர்களின் சேவையும் அங்கு அவசியம் தேவைப்படுகின்றது என்றார். (66-ஸ்ரீ)

# ஆதன மீள் மதிப்பீட்டு வேலைகள் ஸ்தம்பிதம்

(மூளாய்)

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உட்பட்ட ஆதனங்களின் மீள்மதிப்பீட்டு வேலைகள் யாழ். விலை மதிப்பீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களினால் கடந்த ஏழு மாதகாலமாக துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வந்தது.

திடீரென ஏற்பட்ட அமைதியற்ற சூழ்நிலையினால் தொடர்ந்தும் இவ்வேலைகளைச் செய்து முடிக்க இயலாதுள்ளதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வேலைகளில் அறுபத்தைந்து சதவீதமானவை முடிவுற்ற நிலையில் உள்ளது. மிகுதியை இரண்டொருமாத காலத்தில் முடித்து மாநகர சபை ஆணையாளரிடம் ஒப்படைப்பது என முதலில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இவ்வேலைகள் முதலில் தீர்மானித்தபடி முடித்திருந்தால் மாநகரசபையினர் 1991-ம் ஆண்டில் புதிய சோலை வரியை அறவிட உத்தேசித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ப-1 கி)

# மாணவருக்கு இலவச கருத்தரங்கு

வடக்கு, கிழக்கின் தற்போதைய சூழ்நிலை காரணமாக பாடசாலைகளும் தனியார் கல்வி நிறுவனங்களும் மூடிக்கிடப்பதால் மாணவர்களின் கல்வி பெருமளவில் பாதிப்படைந்துள்ளது.

தற்போது ஜீ. சீ. ஈ. (உயர் தர) 1990 பரீட்சைக்கு தயாராகும் மாணவர்கள் அல்லலுறுகின்றனர், இவர்களின்நலன் கருதி யாழ், றோட்டரக்ட் கழகத்தினர் நாளை 13ம் திகதி வெள்ளிக்கிழமையில் இருந்து 21ம் திகதி சனிக்கிழமை வரை சுண்டுக்குளிமகளிர் கல்லூரி மண்டபத்தில் மாணவருக்கானகருத்தரங்கை நடாத்த யாழ்.றொட்டரக்ட் கழகம் தீர்மானித்துள்ளது.

மேற்படி, கருத்தரங்கானது முற்றும் முழுதாக மாணவர்களை பரீட்சைக்கு தயார் செய்யும் நோக்கத்துடன் துரித மீட்டல் வகுப்புக்களையும் வினா விடை வகுப்புக்களையும் கொண்டிருக்கும், எவ்வித கட்டணமும் இன்றி பரீட்சைக்கு தோற்றும் சகல உயர்தர மாணவர்களும்குறிப்பாக வெளிமாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்த மாணவர்களும் இதில் கலந்து கொள்ளலாம். றோட்டரக்ட் கழகத்தின் வேண்டு கோளுக்கமைய கணித விஞ்ஞான, கலை, வர்த்தக பிரிவுகளுக்குரிய பாடங்களை பிரபல ஆசிரியர் குழு நடாத்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது,

# சண்டிலிப்பாயில் கூட்டம்


பயிலுநர் ஆசிரியர் சங்க சண்டிலிப்பாய் பிரிவுக் கிளைக் கூட்டம் 12-ம் திகதி காலை 9 மணிக்கு சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

# நான்கு தூண்கள் மட்டுமே எஞ்சின

தருமபுரப் பகுதியில் குடியேறியிருக்கும் மக்களின் குடிதண்ணீர் பிரச்சனைக்குத் தீர்வு காணுமுகமாக பரந்தன் றோட்டரிக்கழகத்தினால் பல லட்சம் ரூபா செலவில் 50 அடி உயரத்தில் நிர்மாணிக்கப்பட்ட தண்ணீர் தாங்கி கடந்த வாரம் அப் பகுதியில் நடைபெற்ற பொம்மர் குண்டு வீச்சினால் இடிந்து விழுந்து தரைமட்டமாகியது.

தண்ணீர் தாங்கியின் அடியில் இருந்த நான்கு தூண்களுமே இப்பொழுது காட்சியளிக்கிறது. இந்தப் பொம்மர் குண்டு வீச்சுத் தாக்குதலினால் தண்ணீர் தாங்கியின் முன்புறமாக இருந்த இலங்கைத் திருச்சபையைச் சேர்ந்த பரி பவுல் ஆலயமும், பக்கத்திலிருந்த கஸ்தூரிபாய் இல்லமும் சேதமடைந்துள்ளன.

# களம்பல கண்ட யாழ். கோட்டை (5)




ஒல்லாந்தக்கொமுசாறி கோட்டையைத் தாக்குமாறு தனது படைவீரர்களுக்கு உத்தரவிட்டான். ஒல்லாந்தரின் பீரங்கிகள் முழங்கின. வடக்கிலிருந்து பாய்ந்த முதற் குண்டே வடபுறக்கொத்தளத்தைச் சிதைத்தது. தொடர்ந்து மழைபோலப் பீரங்கிக்குண்டுகள் பாய்ந்தன. ஒல்லாந்தரின் எறிபொறிகள் பெரும் கற்களையும் தீப்பந்தங்களையும் கோட்டைக்குள் வீசியெறிந்தன. கோட்டைக்குள் கூக்குரல்கள் எழுந்தன.

யாழ்ப்பாணக்கோட்டைக்குள் பீரங்கிக்குண்டுகள் முற்றும் செலவாகிவிட்டன. போர்த்துக்கேயர் இடுகாட்டில் புதைகுழிகளுக்கு மேலிருந்த கல்வெட்டுச்சிலைகளை உடைத்தும், கோயில்களில் இருந்த வென்கலப்பாத்திரங்களைப் பொடிசெய்தும் பீரங்கிகளிற்போட்டு குண்டுகளாகப் பாவித்தனர். முற்றுகை தொடங்கி 105 நாட்கள். கோட்டைக்குள் இருந்த உணவுப்பொருட்கள் அனைத்தும் தீர்ந்து போயின. கோட்டைக்குள்ளிருந்த நாய்களும் பூனைகளும் அங்கிருந்தோரின் ஆகாரங்களாகின. போர்த்துக்கேயர் கோட்டையிலிருந்த பூனைகளைத் துரத்தியதால் அவை தறிகெட்டு ஓடி கோட்டை மதிற் சுவரைக் கடந்து அகழியினுள் பரிதாபமாக விழுந்தன. பூனையை இழந்த போர்த்துக்கேய வீரன் பரிதாபமாகத் திரும்ப நேர்ந்தது.

21, ஜூன், 1658

கோட்டைக்குள் இருந்த போர்த்துக்கேயர் வெள்ளைக் கொடியுடன் சரணடைந்தனர். கோட்டைக்கதவுகள் திறக்கப்பட்டன. போர்த்துக் கேயரின் கொடி இறக்கப்பட்டு, ஒல்லாந்தரின் கொடி கோட்டையில் ஏற்றப்பட்டது. கோட்டையிலிருந்து வெளிச்செல்வோர் தத்தம் உடைகளை மட்டுமன்றி வேறெதையும் எடுத்துச்செல்லக் கூடாது என கொமுசாறி கட்டளையிட்டிருந்தான். கோட்டையைவிட்டு வெளியேறி ஆண், பெண் அனைவரும் நிர்வாணமாக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டனர்.

### ★ செங்கை ஆழியான்

ஈவிரக்கமின்றி அவமானகர்மான இச்செயலை ஒல்லாந்தர் செய்தனர். போர்த்துக்கேய கன்னிகளையும் விதவைகளையும் ஒல்லாந்தர் தம்முடன் வைத்துக் கொண்டனர். போர்த்துக்கேய வீரர்களை கப்பல்களில் ஏற்றி கோவாவிற்கும் பத்தேவியாவிற்கும் அனுப்பி வைத்தனர்.

போர்த்துக்கேயப் படையில் வேலை செய்த பலர் ஒல்லாந்தருக்கு விசுவாசமாகவிருக்க ஒப்புக்கொண்டனர். மலபார் வீரர்கள் பலரும் பறங்கிகளில் சிலரும் அவ்வாறிருக்க ஒப்புக்கொண்டனர்.

யாழ்ப்பாணக்கோட்டை பிடிபட்டதும், ஒல்லாந்தத் தளபதி, பற்றேவியாவிலுள்ள வைஸ்ரோயிக்குப் பின்வருமாறு கடிதம் எழுதினான்.

"இலங்கையின் இறுதிப்பிரதேசமான யாப்னாப்பட்டினத்தை இன்று கைப்பற்றினோம். கடற்கோட்டையும் (ஹெமன்கீல்), யாப்னாக் கோட்டையும் இலகுவில் எங்களால் கைப்பற்றப்பட்டன. இச்சண்டையில் எதிரிகள் பக்கத்தில் 117பேர் கடற்கோட்டையிலும், 700 பேர் யாழ்ப்பாணக் கோட்டையிலும் கொல்லப்பட்டனர். 800 பேரைக் வீகதிகளாக்கியுள்ளோம். எங்கள் தரப்பில் 98 ஒல்லாந்தரைர்கள் இறந்தனர். 100 பேர் வரையில் கூலிப்படையில் இறந்தனர். 23பேர் கடும் காயமடைந்தனர்.

யாப்னாப்பட்டினம் வளமானது. அரிசி, பருத்தி, சாயவேர், யானைகள், உப்பு என்பன இப்பட்டினத்திலுள்ளன. சுதேசிகள் சிறிய உருவத்தினர். பணிவானவர்கள், அவர்களில் பலர் விவசாயிகளாகவும் நெசவாளர்களாகவும் சாயம் போடுபவர்களாகவும் உள்ளனர். அடங்கி வாழப் பழக்கப்பட்டவர்கள்.

கோட்டைக்குள் கைதானவர்கள் எப்பொருளையும் எடுத்துச்செல்ல நான் அனுமதிக்கவில்லை. கோட்டையைக் கைப்பற்றியபோது அகப்பட்ட பொருட்களை ஒல்லாந்தக் கம்பனிக்குரியனவாகப் பதிவேட்டில் பதிந்து பேணியுள்ளேன். சாயவேர் பல சாக்குகளில் அகப்பட்டன. 340 அடிமைகள் கிடைத்தனர். 30 ஆயிரம் பற்றாகோஸ் பெறுமதியான தங்கம், வெள்ளி ஆபரணங்கள் கொண்ட சிறு புதையல் ஒன்றும் கோட்டைக்குள் அகப்பட்டது.

முஸ்லிம் வர்த்தகர்களுக்கு விற்பதற்காக ஆனைப்பந்தியில் கட்டி வைக்கப்பட்டிருந்த 27 யானைகளையும் எமக்குரியதாக்கி விட்டேன். இந்த யானைகளுக்குப் போர்த்துக்கேயர் மதித்திருக்கும் விலை குறைவு. இவற்றினை முஸ்லிம் வர்த்தகர்களுக்கு நல்ல விலையில் விற்கவுள்ளேன். அத்துடன் இவற்றுள் 10 யானைகளை சோழமண்டலக்கவனர் பிற்றிற்கு அனுப்பி வைக்கவுள்ளேன்.

(தொடரும்)


இட மாற்றம்

அம்பிகாபதி பென்ஸி குட்ஸ்
AMBIHAPATHY FANCY GOODS
66, பெரியகடை வீதி, யாழ்ப்பாணத்தில்

இயங்கி வந்த எமது ஸ்தாபனம் வாடிக்கையாளர்களின் பாதுகாப்பையொட்டிக் கீழ்க்காணும் விலாசத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகிறோம்.

அம்பிகாபதி பென்ஸி குட்ஸ்
இல. 54. அம்மன் றோட், - கந்தர்மடம்
யாழ்ப்பாணம்.

07010

MURASOLIE REGISTRERED AS A NEWSPAPER IN SRILANKA 12-07-1990

★ தமிழர் படுகொலை சகிக்க முடியாது

# 'பிரேமா' செவிக்கு எட்ட வேண்டும்

# ஜெயலலிதா தலைமையில் ஆர்ப்பாட்டம்

"இலங்கையின் வடக்கு,கிழக்குப் பகுதிகளில் அப்பாவித் தமிழர்கள் ஸ்ரீலங்கா இராணுவத்தால் தொடர்ந்து படுகொலை செய்யப் படுவதைச் சலித்துக் கொண்டிருக்க முடியாது. இதற்கு ஒரு முடிவு கட்டியாக வேண்டும்.'' என்று நேற்று சென்னையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ,இந்திரா காங்கிரஸ் கம்யூனிஸட் கட்சி, முஸ்லிம் லீக் (அப்துல் ஹ்மது பிரிவு) ஆகியன இலங்கைத் துணைத் தூதரகம் முன் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றினை நடத்தியதாக அறிவிக்கப்பட்டது.

இலங்கையில் இனப்படுகொலையை நிறுத்தி, அமைதி நிலை நாட்டப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென மகஜர் ஒன்று தூதரக அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டது.

அ. இ. அ. தி. மு. க. தலைவி செல்வி.ஜெயலலிதா இ. காங்கிரஸ் தமிழ் நாடு தலைவர் திரு. வாழப்பாடி ராமமூர்த்தி இ. காங்கிரஸின் மற்றொரு முக்கியஸ்தர் திரு. கருப்பையா மூப்பனார் உட்பட பல அ. இ. தி. மு. க. மாஜி அமைச்சர்களும் முன்னாள் லோக்சபா உபசபாநாயகர் திரு. டி. தம்பித்துரை ஆகியோரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

தமது மகஜரை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸ விடம் கையளிக்க வேண்டுமென்றும் இவ்வேளை வலியுறுத்தப்பட்டது.

கண்மூடித் தனமான இராணுவத்தாக்குதல்களால் தமிழர்கள் உணவு குடிநீர் வசதிகளின்றி ரமேஸ்வரத்திற்கு ஆயிரக்கணக்கில் நாளாந்தம் வரும் அவலத்தைப் போக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. ஸ்ரீ

## போராட்ட பங்களிப்புக்காக

வடபிராந்திய மினிபஸ் சேவைச்சங்கத்திற்கும் சமாஜத்திற்கும் சொந்தமான சகல வாகனங்களையும் நாள் ஒன்றுக்கு மூன்று வாகனங்கள் வீதம் தினசரி விடுதலைப்புலிகளிடம் கொடுத்து போராட்டத்திற்கு தமது பங்கினை வழங்குமாறு வடபிராந்திய மினிபஸ்சேவை சமாஜத் தலைவர் திரு.பொன் ,மதிமுகராசா சகல பஞ்சாயத்துச் சபைகளையும் சகல சங்கங்களையும் பணித்துள்ளார்.

இதுதறித்த ஆலோசனை கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை 14ஆம் திகதி நடைபெறும் எனவும் சகல மினிபஸ் சங்கத்தலைவர்களும் அன்று காலை பத்து மணிக்கு நல்லூர் முத்திரைச் சந்தியில் கூடுமாறும் வேண்டப்படுகின்றனர்.

மேற்படி பணிப்புரையை நடைமுறைப்படுத்தத்தவறும் வாகன உரிமையாளர்களின் பாதை அனுமதி ரத்துச் செய்யப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது,(03—ஸ்ரீ)

## சரசாலையில் சரமாரிச் சூடு

நேற்றுக்காலை சரசாலைப் பகுதியில் ஹெலிகொப்டர் சரமாரியான தாக்குதலை நடத்தியது.

சில வீடுகள் இதனால் சேதமடைந்ததாகவும் அறியப்படுகிறது.

தொடர்ந்து வண்ணாத்திப் பாலத்தடியிலும் இத்தகைய தாக்குதல் நடாத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(ப 5 ஸ்ரீ)

அரசு அறிவிப்பு

## 11 லொறிகள் உணவுப் பொருளுடன் வருகிறதாம்

வடக்குக்கு ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசி மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்சுளுடன் 11 லொறிகள் கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக நேற்று அரசு அறிவித்தது.

இன்று இராணுவப் பாதுகாப்புடன் இந்த லொறிகள் வவுனியாவைக் கடந்து வடக்குக்குச் செல்லும் என்றும் தெரிவிக்கப்பட்டது. ஸ்ரீ

## கொழும்பு அகதிகள் யாழ் வந்து சோந்தனர்

கொழும்பில் அகதிகளாக தங்கியிருந்த சுமார் 1500பேர் நேற்று அதிகாலை ஐந்து மணியளவில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

இவர்கள் இருபது லொறிகளிலும் ஒரு பிரத்தியேக பஸ்ஸிலும் பாதுகாப்பாக வந்து சேர்ந்துள்ளனர். இவர்கள் வந்த வாகனங்கள் மன்னார், சங்குப்பிட்டி வீதி வழியாகவே யாழ் வந்தன. இப்பாதை தற்போது போக்குவரத்துக்கு தடைப்பட்டிருந்த போதிலும் இவ்வாகனங்கள் அப்பாதையூடாக வந்ததை குறிப்பிடத்தக்கது. (3ப5

'ரஷ்ய இயல்பு'

## ஒரு போராளியின் கதை

தாய் நாட்டைக் காக்கப் போராடினான் அந்த இளைஞன், ஜேர்மானியரோடு ஏற்பட்ட மோதலில் எரிகாயங்களால் அவன் முகம் விகாரமாகிவிடுகிறது.

இந்நிலையில் .......
தாய் தந்தையரைப் பார்க்க ஆசை!
தன் காதலியைக் காணத் துடிப்பு!
அவர்கள் தன் குரூரமான கோலத்தை எவ்வாறு ஏற்பார்கள் என்ற தவிப்பு;

அப்போராளி என்ன செய்தான்?

இப்போராளியின் கதையை வெகு விரைவில் முரசொலியில் எதிர்பாருங்கள்.


உ

ஓம் சக்தி

சாவகச்சேரி

அருள்மிகு

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

மஹோற்சவ விழா

கொடியேற்றம் — 12-7-90 வியாழன் காலை 10 மணி
தேர்த்திருவிழா — 20-7-90 வெள்ளி காலை 9 மணி
தீர்த்தத்திருவிழா — 21-7-90 சனி காலை 9 மணி

அனைவரும் வருக! அன்னை அருள் பெறுக!!

இங்ஙனம்,
ப. மகாகணபதிசர்மா
ஆலய தர்மகர்த்தா


## கொக்காவில் முகாம் மீது புலிகள் அதிவேக தாக்கு

கொக்காவில் இராணுவ முகாம்மீது நேற்று முன்தினமிரவு விடுதலைப்புலிகள் மிகப்பெரும் தாக்குதலை நடாத்தியுள்ளனர் என அறிவிக்கப்படுகிறது.

முகாம் பகுதியில் நடைபெற்ற மோதலில் நான்கு

பலாலியில்...

தலைநடத்தினர்.

இத்தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் தாக்குதலுக்கு முகம் கொடுக்க இயலாத இராணுவத்தினர் பலத்த சேதங்களுடன் பின்வாங்கிச் சென்றது என புலிகள் வட்டாரங்கள் கூறின.

இத்தாக்குதலில்விடுதலைப் புலிகளின் தரப்பில் போராளி சீனிவாசன்,சுன்னாகம்' வீரமரணமடைந்தார். இவருக்கு விடுதலைப்புலிகள் வீரவணக்கத்தை தெரிவிக்கின்றார்கள்.

இதேவேளை வசாவிளானிலிருந்து இராணுவம் நேற்று காலை வெளிவர முயன்ற போது விடுலைப்புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டனர் காயமடைந்த இராணுவத்தினர் முகாமிற்கு பின் வாங்கி வசன்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. 9

இராணுவம்...

பிரித்தாளும் சூழ்ச்சிக்கு இடமளிக்கக் கூடாது தான் சகல போராளிகள் குழுக்களையும் எச்சரித்து வந்துள்ளதாகவும் கலைஞர் தெரிவித்தார்.

இராணுவத்தால்அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டு வருவதும்] தமிழர் தம் நல்வாழ்வை முற்றாக இழந்து தமிழ் நாட்டுக்கு அகதிகளாகவருவதையும் கலைஞர் வேதனையுடன் குறிப்பிட்டார்.

இது இவ்வாறு இருக்க, நேற்றும் ஆயிரக்கணக் கான அகதிகள் இராமேஸ்வரத்தில் குவிந்து வருவதாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (ஸ்ரீவெளிபாஜெ

படையினர் பலியானதாகவும் ஒன்பது சிப்பாய்கள் படுகாயமடைந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும் புலிகள் தரப்பில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை விபரம் தெரியவில்லை எனப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

முகாம் தாக்குதலையடுத்து விமானப்படையினர் உதவிக்கு வந்து விடுதலைப்புலிகள் மீது தாக்குதல் நடாத்தியதாகவும் இதனால்

அகதிகள்

தெரிவித்துள்ளது.

கடமைக்குச் சமுகமளிக்காத அரசாங்க ஊழியர் பதவியிழந்ததாகக் கருதப்படுவர் என்றும் அரசு எச்சரித்துள்ளது. (ஸ்ரீ)

கரும்புலி...

சென்று கப்பலில் மோதி வெடிக்க வைத்ததிலேயே இந்தக் கப்பல் பாரிய சேதத்திற்குள்ளாகியது. மூன்று கரும்புலிகளும் இந்த மோதலில் வீரமரணமடைந்துள்ளனர். என்றும் தெரிவிக்கப்பட்டது,

கடற்படைக் கப்பலில் இருந்த ஸ்ரீலங்காகடற்படையினர் பலர் இச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர். கடற் புலியைச் சேர்ந்த கரும் புலிகளான மேஜர். காந்தரூபன் (ரூபன் சோனேஸ்வரன் வல்வெட்டித்துறை) கப்டன் வினோத் (வேலுப்பிள்ளை திலகராஜா) வல்வெட்டித்துறை கப்டன் கொலின்ஸ் பெர்னாண்டோ சில்வெஸ்டர் மன்னார்) ஆகியோரே வீரமரணமடைந்வர்களாவர் என அறிவிக்கப்படுகிறது.

இவர்கள் மூவருக்கும் விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

✳ குறிப்பு

இக்கப்பல் மூழ்கடிப்பு பற்றிய ஆரம்பத் தகவல்கள் நேற்றைய முரசொலியின் விசேட பிற்பகல் பதிப்பில் (3-ஸ்ரீ)

மோதல் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் அரசதரப்பு வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

பிந்திக்கிடைத்த செய்திகளின்படி இத்தாக்குதலில் மூன்று பெண் போராளிகள் வீரமரணமடைந்துள்ளதாக தெரியவருகின்றது. அத்துடன் இத்தாக்குதல் தொடர்ந்து நடைபெற்ற வண்ணமுள்ளதால் சேதவிபரங்கள் தெரியவில்லை. (து-03-ஸ்ரீ)

## வேண்டுகோள்

யாழ் மாவட்டத்திலுள்ள பன்னிரண்டு கமநலச்சேவை நிலையங்களும் தங்கள் தங்கள் பகுதியில் உள்ள விவசாயிகளிடமுள்ள பயறு, கௌபி குரக்கன்,தினை, மற்றும் மரக்கறி விதைகளை உடனடியாக கொள்வனவு செய்கின்றன. தரமான விதைகளை வைத்திருக்கும் விவசாயிகள் தங்கள் பகுதி பெரும்பாக உத்தியோகத்தருடனும் விவசாயப் போதனாசிரியருடனும்தங்கள் பகுதி கமநலச் சேவை நிலையத்துடனும் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## படகு கவிழ்ந்தது

பலத்த சிரமத்தின்மத்தியில் கொழும்பிலிருந்து சங்குப்பிட்டி வந்த யாழ், மக்கள் சங்குப்பிட்டியிலிருந்து கேரதீவிற்கு சிறு மீன் பிடிப் படகில் பிரயாணம் செய்யும் போது ஒரு படகு கவிழ்ந்ததால் சுமார் முப்பது பிராயாணிகள் உடமைகளுடன் நீரில் தத்தளி த போது ஏனைய படகில் வ தவர்களால் காப்பாற்றப்ப டனர். (ப 5)

பெண்போராளி...

கள் முன்னணியின் செய கத்திலும் பின்னர் மா வர் அமைப்பு அலுவலகத் லும் இரவு 9.00 மணிய வில் கல்வியங்காட்டுச் சந் யிலும் அஞ்சலிக்காக வை கப்பட்டு அவரது வீட்டி கையளிக்கப்பட்டது (ப 5)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேட) லிமிறெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி, 'லக்ஷ்மி பில்டிங்'கில் ள்ள அச்சகத்தில் 12-7-90அச்சிட்டு வெளியிடப்பெற்றது,